(3) சட்டப் பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக்குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது—

1. திரு. எம். ராஜா அய்யர்.
2. திரு. ஜி. பராங்குசம்.
3. திரு. எம். சங்கரலிங்கம்.
4. திரு. எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி.
5. திரு. எல். பலராமன்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது:—

1. திரு. எம். ராஜா அய்யர்.
2. திரு. ஜி. பராங்குசம்.
3. திரு. எம். சங்கரலிங்கம்.
4. திரு. எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி.
5. திரு. எல். பலராமன்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கை மீது விவாதம்

* திரு. அய்யணன் அம்பலம்: மாண்புமிகு மேலவைத் தலைவா 4-30 பி.ப.
வர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் சமர்ப்பித்த 1972-73 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையின் மேல் இன்று என்னுடைய